Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 73/2022**

**2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | விவசாயம் |
| பெயர் | - | கே.கே.ரவி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | கந்தசாமி | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | கோயம்புத்தூர் | வயது | - | 60 |
| சாதி | - | - | | | |

**21.09.2023**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் கோயம்புத்தூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 10 ஏக்கர் நிலத்தை வால்பாறையில் உள்ளதலநார் என்ற இடத்தில் எதிரி ரெஜிகுரியனின் தாயாரிடம் குத்தகைக்கு எடுத்து இருந்தேன். குத்தகை சம்பந்தமாக எனக்கும் 1-வது எதிரிக்கும் இடையே சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது.

2. கடந்த 23-03-2020-ல் கொரானா லாக்டவுன் அறிவித்ததால் என்னால் வரமுடியவில்லை. 21-05-2020 தலநாரில் உள்ள என்னுடைய எஸ்டேட்டிக்கு வந்தேன். அங்கு பன்னை வீடு கட்டியுள்ளேன். பன்னைவீட்டை வந்து பார்த்தபோது பூட்டியிருந்த வீடு உடைக்கப்பட்டு இருந்ததை பார்த்தேன். உள்ளே பார்க்கும் போது அங்கிருந்த இரும்பு கட்டில் -4, மெத்தை-4, கம்பளி-4, சமையல் பாத்திரங்கள், H.P. கேஸ் சிலிண்டர்-1, 5 h.p. ஆயில் மோட்டர்-1, அது சம்பந்தப்பட்ட பிவிசி பைப்புகள், ஸ்பிரேயர், கவாத்து கத்தி, கடப்பாறை ஆகியவைகள் திருடு போய்விட்டது,

3. நான் பார்த்துவிட்டு காடம்பாறை காவல் நிலையம் சென்று நானும், பக்கத்தில் குத்தகை எடுத்துள்ள முருகன் என்பவரும் சென்று புகார் கொடுத்தோம். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் நாங்கள் கொடுத்ததுதான் அதில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான் அந்த புகார் (நகல்) அ.சா.ஆ.1 ஆகும், புகார்நகல் என்பதால் எதிரிகள் தரப்பின் வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

4. திருடு போன பொருட்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது

என்னிடம் காட்டப்படும் இரும்பு கட்டில்கள்-2 பிளாஸ்டிக் சேர் புளூ கலர்-2, பெட்-1, டாட்டா கேஸ் கம்பெனி சிலிண்டர்-1 , கேஸ் ஸ்டவ் (பழையது), சுமார் 2 இஞ் பைப் அதன் நீளம் சுமார் 50 அடி பச்சை கலர் ஓஸ் ஆகியவைகள் தான் திருடு போன பொருட்கள் ஆகும். அந்த இரும்பு கட்டில்கள்-2 பிளாஸ்டிக் சேர் புளூ கலர்-2, பெட்-1, டாட்டா கேஸ் கம்பெனி சிலிண்டர்-1 , கேஸ் ஸ்டவ் (பழையது), சுமார் 2 இஞ் பைப் அதன் நீளம் சுமார் 50 அடி பச்சை கலர் ஓஸ் ஆகியவைகள் சா.பொ. 1 முதல் சா.பொ.6 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:

1. புகாரை நான் கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான். புகாரில் சொல்லப்பட்டுள்ள குத்தகை சம்பந்தமாக எந்த ஆவணங்களையும் புகாருடன் சேர்த்து கொடுக்கவில்லை, போலீசார் விசாரணையிலும் கொடுக்கவில்லை என்றால் ஆவணம் கொடுத்துள்ளேன்.

2. நான் 1-வது எதிரியிடம் இருந்து குத்தகை பெறவில்லை அதனால்தான் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புகாரில் குறிப்பிட்டுள்ள சொத்தை யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கும் முருகனுக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது. 23-03-2020 -க்கு முன்பாக எப்போது தலநார் எஸ்டேட்டிற்கு வந்தோம் என்று புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ சொன்னேன் என்றால் சொல்லவில்லை.

3. 21-05-2020 அன்று காடம்பாறைகாவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அன்றைய தேதியில் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். அதற்கு அடுத்த நாள் நான் சொல்லுவது உண்மையா என்பதை அறிய போலீசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். இதே போல பொருட்கள் காணாமல் போய்விட்டது என்று சொல்லி 17-02-2018-ல் குற்ற எண் 12/2018-ல் ஒரு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

4. அந்த புகார் கொடுக்கும் பொழுது சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் புகைப்படம் எடுத்து கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக புகைப்படம் எடுத்து புகாருடன் சேர்த்து கொடுத்தேனா என்றால் இல்லை போலீசார் புகைப்படம் எடுத்தார்கள். கொரனா ஊரடங்கு அறிவிக்கப்பட்டபின்பு வாகன போக்குவரத்து எதுவும் அனுமதிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

5. 21-05-2020-க்கு பிறகு மாவட்டத்துக்குள் சென்றாலும் மாவட்ட ஆட்சியரின் அனுமதியின் பேரில் தான் செல்லவேண்டும் என்றால் தவறு. தேசிய அளவில் கொரனா பரவலுக்கான 4-வது கட்டத்தில் நாம் இருந்ததால் அந்த சமயத்தில் செல்ல மாவட்ட ஆட்சியரின் அனுமதி அவசியம் என்றால் அது தவறு.

6. புகாரில் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அந்த சமயத்தில் எங்களுக்கு தெரியவில்லை போலீசார் விசாரித்த பிறகு தெரியும். என்னுடைய புகாரில் கேஸ் சிலிண்டர் பாரத் பெட்ரோலியத்திற்கு பாத்தியப்பட்டது என்று தான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான்.

7. நான் தலநார் செல்லவேண்டும் என்றால் அங்கு அமைக்கப்பட்டுள்ள வனசோதனை சாவடியில் வாகன பரிசோதனை செய்தபிறகு தான் அனுமதிப்பார்கள் என்றால் அது தவறு. சா.பொ, 1 முதல் 6 எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க பில்கள் எதையும் கொடுக்கவில்லை என்றால்

போலீசாரிடம் விசாரணையில் கொடுத்துள்ளேன். ஷாஜி மீது கொடுத்த புகார் சம்பந்தப்பட்ட வழக்கிலும் இந்த வழக்கிலும் உள்ள வழக்கு சொத்துக்களை இது நாள் வரை நான் நீதிமன்றத்தில் இருந்து இடைக்காலமாக பெற்றுச்செல்லவில்லை என்றால் சரிதான்.

8. 19-06-2020 தேதியில் 1-வது எதிரி என் மீது கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் 13/2020 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் உண்மைதான். அதை தெரிந்துகொண்டுதான் இந்த புகாரை வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன் கொடுத்துள்ளேன் என்றால் தவறு. நான் 1-வது எதிரியும் அவர் சம்பந்தப்பட்ட நபர்கள் மீதும் காவல் துறை உதவியுடன் பொய் புகார் கொடுத்து வருவதை வாடிக்கையாக கொண்டுள்ளேன் என்றால் தவறு.

9. நான் புகாரில் சொல்லியுள்ள சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்றும், நீங்கள் கொடுத்த பொய்யான புகாரின் பேரில் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. 2020 காலகட்டத்தில் பன்னீர்செல்வம் என்பவர் எனக்காக வேலை செய்துவந்தார் என்றால் ஆமாம். அவர் 1-வது எதிரி மீது குற்ற எண் 14/2020-ல் ஒரு வழக்கு தொடுத்திருந்தார் என்றால் ஆமாம்.

10. எனக்கு தெரிந்த நபரான காக்கா ரவிச்சந்திரன் என்பவர் 1-வது எதிரி மீது ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால் ஆமாம். நானும், எனக்கு சம்பந்தப்பட்ட நபர்களும் சேர்ந்து கொண்டு 1-வது எதிரிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்கும் நோக்கில் பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் தவறு.

மறுவிசாரணை இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்)திரு.ரெ.செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.